இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 29-08-2024

# அமெரிக்கப் பயணம் வெல்லட்டும்!

ஆகஸ்ட் 28 - திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக - தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று ஆறு ஆண்டுகள் முடிவுற்று ஏழாவது ஆண்டு தொடங்குகிறது. அவர் இப்போது இயக்கத்தின் தலைவராக மட்டுமல்ல - தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளார். முதலமைச்சர் என்ற தகுதியோடு ஆகஸ்ட் 27 ஆம் நாள் அரசு முறைப் பயணமாக அமெரிக்க நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். அவரது ஐந்தாண்டுப் பயணம் எத்தகைய வெற்றிப் பயணமாக அமைந்துள்ளது என்பதை இதன் மூலம் அறியலாம்.

**“எனக்கு உயிரும் - உணர்வுமாய் - தந்தையும் - தாயுமாய் - தலைவருமாய் இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அமர்ந்திருந்த முதலமைச்சர் நாற்காலியில் என்றாவது ஒருநாள் நான் உட்காருவேன் என்றும் அந்தக் காலத்தில் நினைத்தது இல்லை. ஆனாலும் எனது இலக்கை நான் மிகச் சரியாகத் தீர்மானித்தேன். கழகம்தான் என் களம். திராவிடம்தான் என்னுயிர்க் கொள்கை. தமிழ்நாட்டுக்குச் செய்யும் நன்மையே நமது அன்றாடப் பணி என்பதாக என்னை எனது சிறுவயதில் இருந்து வடிவமைத்துக் கொண்டேன்”** என்று சொன்னவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் நாளன்று அவரை இன்னொரு கலைஞராகவே தமிழ்நாடு பார்த்தது. ‘நான் கலைஞர் அல்ல’ என்று பொதுக் குழுவில் தன்னடக்கத்தோடு தலைவர் அவர்கள் விளக்கம் அளித்தாலும், அவர் தனது செயல்பாட்டால் இரண்டாம் கலைஞராகவே காட்சி அளித்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் நிறைவேற்றிக் காட்டிய திட்டங்களின் மூலமாகத் தாயுமானவராய் காட்சி தருகிறார் முதலமைச்சர் அவர்கள். தனது தலைமைப் பொறுப்புக்குப் பிறகான அனைத்துத் தேர்தல்களிலும் வென்று காட்டி இருப்பதன் மூலமாக - அவையத்து முந்தியிருக்கச் செய்த செயல் காரணமாக - தந்தையுமானவராகக் காட்சி தருகிறார்.

இந்த வெற்றிகளுக்கு எல்லாம் முக்கியக் காரணம், தனது உள்ளத்தில் தேக்கி வைத்திருக்கும் தலைவர்களும், அவர் தம் கருத்தியல்களும்தான். **“சுயமரியாதைக் கொள்கையில் தந்தை பெரியார் - இனமான எழுச்சியில் பேரறிஞர் அண்ணா - இயக்கத்தை வழிநடத்துவதில் தமிழினத் தலைவர் கலைஞர் - மொழி உரிமையில் இனமானப் பேராசிரியர் - ஆகிய நால்வரின் நிழற்குடையில் நிற்பவன் நான். இவர்கள்தான் என்னைச் செதுக்கிய சிற்பிகள்”** என்று தலைவர் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள். இவர்கள்தான் கடந்த நூற்றாண்டைக் காத்த காவல் அரண்கள். அவர்கள் வழித்தடம் மாறாமல் செயல்படுவதால்தான், செல்வதால்தான் இன்றைய காவல் அரணாக முதலமைச்சர் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.

தலைமைப் பதவி என்பது தானாகக் கிடைத்துவிடவில்லை. ஐம்பது ஆண்டு கால உழைப்புக்குக் கிடைத்த வெகுமதி என்பதை எதிரிகளும் ஒப்புக் கொள்வார்கள். ‘பொதுக்குழு’ அளித்த தகுதியை ‘பொதுமக்கள்’ ஒப்புக் கொண்ட தகுதியாக மாற்றிக் காட்டியதில்தான் தளபதியின் தனிச்சிறப்பு அடங்கி இருக்கிறது. கட்சி எல்லைகளைத் தாண்டி, ‘அனைவருக்குமான தலைவராக’ அவர் போற்றப்படும் அளவுக்கு செயல்பட்டார்கள். அதனால்தான் இந்தியா வியந்து பார்க்கும் தலைவராக உயர்ந்து நிற்கிறார்.

முதலமைச்சர் பொறுப்பும் சாதாரணமாகக் கிடைத்துவிடவில்லை. 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டு காலமும் ஒரு நாள் கூட ஓய்வில்லாமல் செயல்பட்டுக் கொண்டே இருந்தார். அதனால் கிடைத்தது. முதலமைச்சர் ஆனபிறகும் ஓய்வு கொள்ளவில்லை. 2021 முதல் இன்று வரையும் ஓய்வில்லாமல் உழைத்து வருகிறார். ‘நான் எனது சக்திக்கு மீறி உழைத்து வருகிறேன்’ என்பதும் அவரது வாக்கு ஆகும்.

சக்திக்கு மீறி உழைப்பதால்தான் இன்றைய தமிழ்நாடு, இந்தியாவே வியந்து பார்க்கும் தமிழ்நாடாக - உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் தமிழ்நாடாக உள்ளது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்குகிறது தமிழ்நாடு. அதிகமான தொழிற்சாலைகள் இருக்கும் மாநிலம். பள்ளிக் கல்வியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளோம். இந்தியாவில் 30 விழுக்காடு சிறந்த உயர்கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. அனைத்து வளர்ச்சிக் குறியீட்டிலும் முன்னணியில் இருக்கிறோம். பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. மதம், சாதிய மோதல்கள் இல்லாத மாநிலமாக இருக்கிறது. இவை அனைத்தையும் உருவாக்கிக் கொடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இன்னும் வளர்க்க நினைக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதற்காகவே அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளார். கடந்த மூன்றாண்டு காலத்தில் மட்டும் இதுவரை 872 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது. இதன் மொத்த மதிப்பு 9 லட்சத்து 99 ஆயிரத்து 93 கோடி ரூபாய். இவற்றின் மூலமாக 18 லட்சத்து 89 ஆயிரத்து 234 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதில் 234 திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கி விட்டது. 4 லட்சத்து 16 ஆயிரத்து 717 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து விட்டது. மற்ற ஒப்பந்தங்களும் படிப்படியாக செயல்பாட்டுக்கு வரப் போகின்றன.

அதிக முதலீடுகளை ஈர்க்கக்கூடிய உயர் தொழிற்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய தொழில்களையும் ஈர்த்து, அதன் மூலம், தமிழ்நாட்டினை 2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றிட வேண்டும் என்ற இலக்கினை முன்வைத்துச் செயல்பட்டு வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

தலைவர் ஆவதற்கு முன்பு நடந்த ஈரோடு மண்டல மாநாட்டில் கழகத்துக்காக ஐம்பெரும் முழக்கங்களை தளபதி அவர்கள் அறிவித்தார்கள்.

- ★ **கலைஞரின் கட்டளையைக் கண்போல் காப்போம்.**
- ★ **தமிழரை வளர்த்து தமிழைப் போற்றுவோம்.**
- ★ **அதிகாரக் குவியலை அடித்து நொறுக்குவோம்.**
- ★ **மதவெறியை மாய்த்து மனிதநேயம் காப்போம்.**
- ★ **வளமான தமிழகத்தை வளர்த்து எடுப்போம். -**

- இவை தான் அந்த ஐம்பெரும் முழக்கங்கள்.

**தலைவர் - முதலமைச்சரின் இலக்கு பெரிது. அதனால் அவரது உழைப்பும் பெரிதாக இருக்கிறது! அமெரிக்கப் பயணம் வெல்லட்டும்!**



சென்னை, கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் திராவிடமணி – ஆனந்தி இல்லத் திருமண விழா நேற்று நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழா தலைமையேற்று, மணமகன் தி.உதயசூரியன், மணமகள் கே.எஸ்.ஜெயபிரியா ஆகியோரின் சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்தார். இதில் மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., திராவிட இயக்க எழுத்தாளர், பேச்சாளர் வே.மதிமாறன், ஒன்றியச் செயலாளர் சரவணன், பகுதிக் கழகச் செயலாளர் புழல் நாராயணன், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழில் பெயரிடுங்கள்

# சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை உடனே துவக்கிடுவீர்!

## கழகப் பேச்சாளர் திராவிட மணி இல்ல மணவிழாவில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 29 -**

**சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை உடனே துவங்க வேண்டும் என்று இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணவிழா ஒன்றில் வாழ்த்துரை வழங்கி பேசுகையில் குறிப்பிட்டார்.**

சென்னை, கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் திராவிடமணி – ஆனந்தி இல்லத் திருமண விழா நேற்று நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழா தலைமையேற்று, மணமகன் தி.உதயசூரியன், மணமகள் கே.எஸ்.ஜெயபிரியா ஆகியோரின் சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்து, வாழ்த்திப்பேசினார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: -

தலைமைக் கழகப் பேச்சாளரும், சென்னை வடகிழக்கு மாவட்டக் கலை, இலக்கிய பகுதறிவுப் பேரவையின் தலைவர் அண்ணன் திராவிடமணி அவர்களின் இல்லத் திருமண விழாவை நடத்தி வைப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த திருமண நிகழ்ச்சி மிகமிக ஒரு முக்கியமான, மகிழ்ச்சியான நாளில் நடைபெறுகிறது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில்தான் நம் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கழத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்கள். கழகத் தலைவராக இன்று ஏழாம் ஆண்டில் அடியெடுத்து வைத்து, நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு சிறப்புக்குரிய நன்னாளில், இந்த திருமண நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்த சிறப்புக்குரிய நாளில் நம் உதயசூரியன், ஜெயபிரியா இணையரின் திருமணத்தை மகிழ்ச்சியுடன் நாம் நடத்தி வைத்திருக்கிறோம். இந்த மணவிழா கழகக் குடும்பங்களுக்கே உரித்தான வகையில், சுயமரியாதைத் திருமணமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### இளைஞர் அணி

மணமகனின் தந்தை பெயர் திராவிடமணி, மணமகனின் பெயர் உதயசூரியன். அண்ணன் திராவிடமணி அவர்கள், இளைஞர் அணியில் இருந்து வந்தவர். ஆகவே, இந்தத் திருமணத்தை இளைஞர் அணிச் செயலாளராக இருந்து நடத்தி வைப்பதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி. அதைவிட கூடுதல் மகிழ்ச்சி இங்கு சுதர்சனம் பேசியதிலிருந்து இது காதல் திருமணம் என்றும் தெரிகிறது. எனவே, அதற்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989ஆம் ஆண்டு இளைஞர் அணியில் தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டு ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு கழகப் பொறுப்புகளில் கழகப்பணி ஆற்றியவர்தான் அண்ணன் திராவிடமணி அவர்கள். நம் தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது மாநிலமெங்கும் இளைஞர் அணிப் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தினார்கள்.

அப்படி நடைபெற்ற கூட்டங்கள் ஒன்றில்தான் அண்ணன் திராவிட மணி அவர்களின் பேச்சாற்றலைக் கண்ட நம் தலைவர் அவர்கள், அண்ணன் அவர்களை தலைமைக் கழகப் பேச்சாளராக நியமித்திருந்தார்கள். கிட்டத்தட்ட 43 ஆண்டுகளாக தமிழ்நாடெங்கும் கழகத்தின் கொள்கைகளையும், கழக அரசின் சாதனைகளையும் அண்ணன் அவர்கள் எதிரொலித்து வருகிறார்கள்.

1995ஆம் ஆண்டில் அண்ணனின் திருமணத்தை, நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் நடத்தி வைத்தார்கள். இன்றைக்கு அவரின் மகன் உதயசூரியனின் திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### எதிரிகளின் உளறல்கள்

அண்ணன் அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளர் மட்டுமல்ல, சிறந்த மீம்ஸ் கிரியேட்டராகவும் கழகத்திற்காக செயலாற்றி வருகிறார். அவரின் மீம்ஸ்களை நானும் பாத்திருக்கிறேன். எதிரிகளின் உளறல்களுக்குத் தக்க பதிலடிக் கொடுக்கும் வகையில், பல்வேறு மீம்ஸ்களை வெளியிட்டு வருகிறார். அந்தப் பணி தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

யூடியூப் சேனல்களிலும், சமூக வலைதளங்களிலும் உரையாற்றி வருகிறார். அண்ணன் அவர்கள் கழகம் அறிவிக்கின்ற அத்தனைப் போராட்டங்களிலும் பங்கெடுத்து கிட்டத்தட்ட கழகத்திற்காக, தமிழ்நாட்டு மக்களுக்காக பதினைந்துக்கும் மேற்பட்ட முறைகள், சிறை சென்றிருக்கிறார் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

### களம் இணையதளம்

இப்படிக் களத்திலும், அதற்கு சமமாக இணையதளத்திலும் ஆற்றி வரும் கழகப்பணிகள் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்து வருகின்றன. அண்ணன் திராவிடமணியைப்போல் ஒவ்வொரு தொண்டனும் செயல்பட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தை, எந்த கொம்பனாலும் வீழ்த்த முடியாது, என்பதை உறுதி செய்கிறேன்.

இப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட அண்ணன் அவர்களின் இல்லத் திருமணத்தை நடத்தி வைப்பதை, உண்மையிலேயே நான் பெருமையாகக் கருதுகிறேன். இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### திட்டங்கள் சாதனைகள்

அண்ணன் திராவிட மணி அவர்கள் எப்படி கழகத்தின் திட்டங்களையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்கிறாரோ, அதேபோல் இந்தத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள நீங்கள் அத்தனைபேரும் கழகத்தின் அத்தனைத் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் இருக்கின்றன. எனவே, இப்போது இருந்தே நம் தேர்தல் பிரச்சாரத்தைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மீண்டும் கழக ஆட்சியை அமைத்திட, இந்தத் திருமண நிகழ்ச்சியின் மூலம் உறுதியை ஏற்போம் என்று கூறிக்கொண்டு, மணமக்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, விட்டுக்கொடுத்து வாழுங்கள். சுயமரியாதையோடு வாழுங்கள்.

அண்ணன் சுதர்சனம், `விட்டுக் கொடுத்து வாழவேண்டும்’ என்று சொன்னார். மிகவும் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்று அவசியமில்லை. சுயமரியாதையோடு விட்டுக்கொடுத்து, உங்கள் உரிமையை விட்டுக்கொடுக்காமல் வாழவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரேயொரு வேண்டுகோள். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு அழகான தமிழ்ப் பெயரில் பெயரிடுங்கள் என்று கூறிக்கொண்டு மணமக்கள் உதயசூரியனும், ஜெயபிரியாவும், பெரியாரும் பகுத்தறிவும் போல, பேரறிஞர் அண்ணாவும் தமிழ்நாடும் போல, தலைவரும் தமிழும் போல, நம் முதலமைச்சரும் உழைப்பும் போல வாழ்க, வாழ்க என்று கூறிக் கொண்டு வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., திராவிட இயக்க எழுத்தாளர், பேச்சாளர் வே.மதிமாறன், ஒன்றியச் செயலாளர் சரவணன், பகுதிக் கழகச் செயலாளர் புழல் நாராயணன், ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர் ஜெகதீசன், பொதுக்குழு உறுப்பினர் ஜெயம் மதன், சோழவரம் ஒன்றிய அவைத் தலைவர் ஹாசிம் முகமது, அலமாதி ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்வாணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் இனியன், கே.பி.கணேசன் உள்பட கழக முன்னோடிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் பலரும் கலந்து இவ்விழாவில் கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..! கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைத் தலைமைக்குத் தேர்வு செய்து தருமாறு, கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணியை அறிவுறுத்தியிருந்தார். அந்த வகையில், **‘என் உயிரினும் மேலான..!’** என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர். ஆகஸ்ட் 17, 18, 24, 25 ஆகிய தேதிகளில் 36 மாவட்டங்களில் பேச்சுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. எஞ்சியுள்ள திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் புதுச்சேரி மாநிலத்திற்குமான பேச்சுப் போட்டி மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஒருங்கிணைப்பில், இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாட்டில், கீழ்க்காணும் நாட்களில் நடைபெறவிருக்கிறது, அதன் விவரம் வருமாறு :

**29-08-2024, வியாழக்கிழமை**

| வ. எண் | மாவட்டம், மாநிலம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | மேலிடப் பார்வையாளர் (மாநில துணைச் செயலாளர்) |
|---|---|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | ஹோட்டல் பீமாஸ் வைஸ்ராய், பாரதி நகர், ராமேஸ்வரம் பிரதான சாலை, இராமநாதபுரம்-3 | முனைவர் சபாபதிமோகன், அமுதரசன், மருத்துவர் யாழினி<br>வே.மதிமாறன், உமா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ஜி.பி.ராஜா |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 25–08–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி